சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 137/2017

பெயர் திரு. ஏழுமலை த/பெ. கிருஷ்டப்பன் நாள். 19.11.2024

**வாதி சாட்சி 2 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு சொந்த ஊர் கானாத்தூர். வழக்குத் தரப்பினர்களை எனக்கு தெரியும். 1ம் பிரதிவாதி தகப்பனார் பெயர் கந்தசாமி, தாயார் பெயர் கிருஷ்ணவேணி. கந்தசாமியின் தகப்பனார் பெயர் எனக்கு தெரியாது. கந்தசாமிக்கு நான்கு பெண்கள், இரண்டு ஆண்கள் வாரிசுகளாவர். அவர்கள் பெயர் வசந்தி, கலாவதி, ஞானாம்பிகை, சுதா, ஸ்ரீதர் மற்றும் 1ம் பிரதிவாதி. யார் யார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. நிலத்தின் மீது 1ம் வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார். 1ம் வாதி, 1ம் பிரதிவாதி மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் தாத்தா பெயர் சுந்தர கிராமணி என்றால் சரிதான். வழக்குச் சொத்துக்கள் மற்றும் இதர சொததுக்கள் 1ம் பிரதிவாதியின் தாத்தா சுந்தர கிராமணிக்கு உரிமையான சொத்துக்கள் என்றால் சரிதான். அதனால் சுந்தர கிராமணியின் சொத்துக்கள் அனைத்திற்கும் அவரின் வாரிசுகளுக்கு பாகம் உண்டு என்றால் எனக்கு தெரியாது. வாதிகளுக்கு சொத்து எவ்வாறு பாத்தியம் என்றால் 1ம் வாதியின் கணவர் மூலம் பாத்தியம். ஸ்ரீதர் எப்பொழுது இறந்தார் என்று எனக்கு தெரியாது.

2. முதல் விசாரணையில் சொல்லியுள்ள குடும்ப ஏற்பாடு எப்பொழுது ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. அந்த குடும்ப ஏற்பாடு ஸ்ரீதர், 1ம் பிரதிவாதி, வசந்தி, சுதா, கலா மற்றும் ஞானாம்பிகை ஆகியோருக்கு இடையே ஏற்பட்டது. அந்த குடும்ப ஏற்பாடு ஆவணத்தை நான் பார்க்கவில்லை. சுந்தர கிராமணி சொத்துக்கள் பாகம் பிரிக்கப்படவிலலை என்றாலும் வழக்கிற்காக பாகம் பிரித்துக் கொண்டதாக பொய்யாக

சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வாய்மொழியாக அடைமானம் வைத்த சொத்தின் புல எண் எனக்கு தெரியாது. ஊர் முழுவதும் அவரது சொத்துதான். 1ம் பிரதிவாதியின் தாயார் பெற்ற அடைமான கடனை 1ம் வாதி அடைத்தார். எந்த சொத்து அடைமானம் வைக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. 1ம் வாதி தன் கணவர் பெயரில் உள்ள சொத்தை மட்டும் அடைமானத்தில் இருந்து மீட்டார். அவரவர் சொத்துக்கு அவரவர் வரி செலுத்தி வருகிறார்கள். வரி செலுத்திய ஆவணத்தை நான் பார்க்கவில்லை. வாதி எக்காலத்திலும் வரி செலுத்தியது கிடையாது என்றால் சரியல்ல. வழக்கு குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், குடும்ப ஏற்பாடு எதுவும் நடைபெறவில்லை என்றாலும், வாதிக்கா பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை– இல்லை.